# சிறகு முளைத்த ஊஞ்சல்



வண்ணத்துப் பூச்சிகளின்
குழந்தைப் பராயத்தை
பெரிதாக யாரும் வியந்து ரசிப்பதில்லை

ஜ மீ ல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறகு முளைத்த ஊஞ்சல்

சிறுவர் பாடல்கள்

ஜமீல்

வெளியீடு :

புதுப்புனைவு பதிப்பகம் - மருதமுனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறகு முளைத்த ஊஞ்சல் - சிறுவர் பாடல்கள்**

ஆசிரியர்: ஜமீல். ©அப்துல் றகுமான் அப்துல் ஜமீல். விலாசம்: 124 ஏ, ஸ்டார் வீதி, பெரிய நீலாவணை - 01, மருதமுனை, இலங்கை. **கைபேசி:** 077-9689392. முதற்பதிப்பு: ஏப்பிரல் 2016. **வெளியீடு:** புதுப்புனைவு பதிப்பகம், மருதமுனை. **கணினி வடிவமைப்பு:** ஏ.எம். அமானுல்லாஹ். அட்டை வடிவமைப்பு: நவாஸ் சௌபி அச்சுப் பதிப்பு: எக்ஸலன்ட் பிறின்ட், சாய்ந்தமருது. பக்கம்: 40. விலை: 200.00

**Sirahu Mulaiththa Oonchal - Children Lyrics**

**Author:** Jameel. © Abdul Rahuman Abdul Jameel, **Address:** 124A, Star Road, Periyaneelavanai-01, Maruthamunai, Sri Lanka, **Mobile:** 077-9689392. **First Edition:** April-2016, Published by: Puthuppunaivu Publication, Maruthamunai. **Type Setting & Layout by :** A.M. Amanullah. **Cover Design by:** Nawas Sawfi, **Printed By:** Excellent Print-Sainthamaruthu 077 6401296, Pages: 40. Price: Rs. 200.00

ISBN: 978-955-7733-01-2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலில் கரைந்துபோன
அயிலன் சூர்திக்கும்...
எனது மகள் ஹயா, ஷரின்
மற்றும் மகன் றபாவிற்குமானது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜமீல்

இயற்பெயர் அப்துல் றகுமான் அப்துல் ஜமீல். கிழக்கிலங்கையின் அம்பாறை மாவட்டத்தில் மருதமுனைக் கிராமத்தில் பிறந்தவர். 1993 ஆம் ஆண்டு சிறுவர் இலக்கியத்திற்கான தேசிய விருதைப் பெற்றவர். இவரது முதல் கவிதைப் பிரதி 'தனித்தலையும் பறவையின் துயர் கவியும் பாடல்கள்' 2007 யாழ் இலக்கியப் பேரவையின் கவிஞர் அய்யாத்துரை விருதையும், தடாகம் இலக்கிய வட்டத்தின் கலைத்தீபம் விருதையும் பெற்றது. 'உடையக் காத்திருத்தல்' 2010 கொடகே சாகித்திய விருதின் இறுதிச் சுற்றில் சான்றிதழினைப் பெற்றதோடு 'காற்றை அழைத்துச் சென்றவர்கள்' 2014 ஆம் ஆண்டு கொடகே சாகித்திய விருதின் சான்றிதழையும், அரச சாகித்திய விருதின் சான்றிதழையும், பேனா கலை இலக்கியப் பேரவையின் விருதையும் பெற்றுக்கொண்டதோடு 'தாளில் பறக்கும் தும்பி' கவிதைப் பிரதி 2015 ஆம் ஆண்டு வெளிவந்தது. இது 2016 ஆம் ஆண்டுக்கான கவிஞர் வைரமுத்து அறக்கட்டளை விருதையும் பெற்றுக்கொண்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

124 ஏ, ஸ்டார் வீதி,
பெரியநீலாவணை – 01
மருதமுனை
இலங்கை.

கைபேசி : 077 9689392
மின்னஞ்சல்: jameel2013a@gmail.com
முகநூல் : Abdul Jameel

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறகு முளைத்த ஊஞ்சலில்
# ஒரு சிறுவனாக ஆடிப் பார்த்தல்

பேராசிரியர் செ.யோகராசா

புனைகதை போன்றே சிறுவர் பாடல் என்பதும் நவீன இலக்கிய வடிவங்களில் ஒன்றாகும். எனினும், புனைகதையைவிட சிறுவர் பாடல் எழுதும் முயற்சி கடினமானது. ஈழத்தில் இவ்வாறான முதன் முயற்சி 1918ல் இடம்பெற்றுள்ளது. இவ்விதத்தில் ஏறத்தாழ நூற்றாண்டு ஆகிவிட்டாலும் ஈழத்தில் சிறுவர் பாடல் துறையிலே போதுமான வளர்ச்சி ஏற்படவில்லை. இதற்கு பல காரணங்க ளுள்ளன. சிறுவர் நிலையிலிருந்தும் பெரியவர்கள் நிலையிலிருந் தன்றும் சிறுவர்களைப் புரிந்துகொண்டு எழுத வேண்டும். அவர்களுக்கு விருப்பமான பொருட்கள் பற்றி (உ-ம் : பறவை, மிருகம்) எழுத வேண்டும் எளிமை மலிந்திருக்க வேண்டும் ஓசை மிகுந்திருக்க வேண்டும். எனினும், இவைபற்றி புரிந்துகொண்டு எழுதுகிற நிலை ஓரளவு வளர்ந்திருப்பினும் அரைத்த மாவை அரைக்கின்ற நிலையே காணப்பட்டது. இத்தகைய ஆரோக்கியமற்ற சூழலில் ஜமீலின் இப்பிரதியில் பழைய விடயங்கள் பற்றி மட்டுமன்றி புதிய விடயங்கள் பற்றியும் பாடுகின்ற நிலை காணப்படுவது பாராட்டுக்குரியது.

மேற்கூறிய விதத்தில் குறிப்பிடத்தக்க விடயங்களிலொன்று புத்தகம் பற்றிய பாடல். சிறுவர்களுக்கு வாசிப்பார்வத்தினை ஏற்படுத்த வேண்டுமெனில் புத்தகங்கள்மீது ஆசையை ஏற்படுத்த வேண்டும்.

சூழலியல் இன்று முக்கியத்துவம் பெறும் விடயமாகும். இத்தொகுப்பிலுள்ள மரங்கள், புல்வெளி, பாதை ஆகிய பாடல்கள் அத்தகையவை. புல்வெளியின் சிறப்பும் அதன் முக்கியத்துவமும் இதுவரையும் வேறு யாரும் பாடியிருப் பதாகத் தெரியவில்லை.

வீட்டுத் தோட்டம் செய்வதில் சிறுவயதிலேயே நாட்டம் ஏற்படுத்துவதும் அவசியமானதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையான விடயம் என்ற விதத்திலே "நாட்காட்டி" பாடல் சிறுவர்களை ஈர்க்கக் கூடியது.

மேற்கூறியவாறு பொருள் நோக்கிய இப்பிரதி பெற்றுள்ள சிறப்பினைவிட எடுத்துள்ள கருத்தினை வெளிப்படுத்துகின்ற விதத்திலே இத்தொகுப்பானது மிக முக்கியமானதும் அவசியமானதுமாகும்.

ஒட்டுமொத்தமான நவீன கவிதை வளர்ச்சியில் கவிதை வெளிப்பாட்டு முறையிலே முன்னோடிகளற்ற விதத்தில் புதுமை செய்து முன்னோடியான கவிஞரொருவரைத் தந்த பெருமை கல்முனைக்குரியது. அவ்வாறே சிறுவர் பாடல் துறையில் அத்தகைய பெருமை ஜமீல் ஊடாக மருதமுனைக்கு வாய்த்துள்ளது எனலாம்.

உண்மைதான், இத்தொகுப்பிலுள்ள சிறுவர் பாடல்களில் வெளிப்பாட்டு முறைமை முற்றிலும் புதுமையானது கவிதையோ பாடலோ எதுவாயினும் அதன் உயர்ப்பின் அடிப்படை என்பது சொல், சொற்றொடர், அடி பயன்பாட்டிலேயே தங்கியுள்ளது. சொற்களின் தேர்வு பயன்பாடு சொற் சேர்க்கை முரண் சேர்க்கைகள் தரும் புதுமை தொடரின் அண்மை நிலை, மாற்றம் என்பன கவிதைக்கு அல்லது பாடலுக்கு வளம் சேர்ப்பவை, வலுச் சேர்ப்பவை சிறுவர் பாடல் தொகுதி என்ற வகையிலே அத்தகு புதுமையான வெளிப்பாட்டினை முதன் முதலாக இத்தொகுப்பிலே ஆங்காங்கு தரிசிக்க முடிகிறது.

நூலின் தலைப்பை கவனியுங்கள், சிறகு முளைத்த ஊஞ்சல் என்னுரை தலைப்பை கவனியுங்கள் என் சொற்களின் விழுதுகளில் எப்போதும் ஊஞ்சலாடும் சிறுவர்கள் ஆங்காங்கே வரும் அடிகளை கவனியுங்கள்.

புத்தகம் நல்ல புத்தகமாம்
புதுச் சொற்கள் நீந்தும் புத்தகமாம்

பசுமை நிறைந்த உலகை
பணிவுடன் சமைக்குது தண்ணீர்

பன்னிரண்டு மாதச் சிறகுகளை
பாங்காய் கொண்டது நாட்காட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறியவாறான புதுமையான புதியதான சொற் சேர்க்கைகள் சிறுவர்களை மயக்கி இருப்பவையாயினும் அவற்றை உருவாக்கும் போது நிதானத்தை கடைப்பிடிக்க வேண்டிய அவசியமுள்ளது. அன்றேல் சிறுவர்கள் வாக்கியம், எழுத்து முறைமை தடம் மாறிவிடவும் வாய்ப்புள்ளது.

எவ்வாறாயினும் முற்கூறப்பட்ட பொருள் மாற்றமும் சிறுவர்களை ஈர்க்கக் கூடிய வெளிப்பாட்டு முறைமையும் வரவேற்கக் கூடியவை பாராட்டப்பட வேண்டியவையென துணிந்து சொல்லலாம்.

2016.09.09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் சொற்களின் விழுதுகளில் எப்போதும் ஊஞ்சலாடும் சிறுவர்கள்

ஜமீல்

ஏலவே எனது நான்கு கவிதைப் பிரதிகள் வெளிவந்து அது சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைப் பாடுபொருளாகக் கொண்டு பின்னப்பட்ட கவிதைகளென எல்லாத் தரப்புகளாலும் பரவலாக வியந்து பேசப்பட்ட போதிலும் இதுதான் எனது முதலாவது சிறுவர் இலக்கியப் பிரதியாகும்.

மேலும், இது எனது சொற்களை பதியுமிடும் காலத்தில் அதாவது பயில் நிலையில் அவ்வப்போது பத்திரிகை வாயிலாகவும், காற்றில் தவழ்ந்துவரும் வானொலியிலும் வெளிவந்த சிறுவர் பாடல்களின் சிறு தொகுப்பே இந்த சிறகு முளைத்த ஊஞ்சல் ஆகும்.

சிறுவர் இலக்கியங்கள் படிப்படியாக வழக்கொழிந்து தூர்ந்துவரும் இக்காலகட்டத்தில் இப்பிரதியானது காலம் கடந்தாவது கனிந்து வருவதையிட்டு நான் மட்டற்ற மகிழ்ச்சியும் பேருவகையும் அடைகிறேன்.

இருண்மை, இறுக்கம், படிமம், குறியீடுகள் மிதமிஞ்சிக் கிடக்காமலும், மந்திரத் தன்மைகளும் மாயாஜாலங்கள் நிறைந்ததுமான மர்ம முடிச்சுகள் இல்லாமலும் புதிர்த்தன்மைகள் அற்றும் சிறுவர்களுக்கு உகந்தாற்போல் எளிய மொழியில் மிக இலகுவில் புரிந்துகொள்ளும் வகையில் இப்பாடல்களை நான் நெய்துள்ளேன்.

இது சின்னஞ் சிறார்களின் மனதை நிச்சயம் கொள்ளை கொள்ளும் அல்லது ஏதோ ஒரு வகையில் ஆற்றுப்படுத்தும் என நான் திடமாக நம்புகிறேன்.

2016.04.04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருவனமாகும் என் நன்றி...

தினகரன் வாரமஞ்சரி, வீரகேசரி, தினக்குரல், சுடர் ஒளி, அத்தோடு இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் மற்றும் பேராசிரியர்கள் செ. யோகராசா, றமீஸ் அப்துல்லா, இன்னுமான கவிதைத் தோழர்கள் உமாவரதராஜன், அறநிலா, அம்றிதா ஏயெம், அலறி, ஏ.எம்.குர்ஷித், அல்ஜ், டீன்கபூர், பி.எம்.எம்.ஏ. காதர், மருதமுனை ஹஸன், விஜிலி, முல்லை முஸ்ரிபா, றியாஸ் குரானா, நவாஸ் சௌபி, ஜிப்ரி ஹாஸன், சபறுள்ளா, ஜே.பிரோஸ்கான், நஸ்புள்ளா, சஜாத், முஜாரத், நஸார் இஜாஸ், ஏ.எம்.அமானுல்லாஹ், சகோதரர் சமட், ஜவாத், தம்பி கபீல், அன்சார், மலீக், மைத்துனர் நௌபாஸ், மகன் முயீஸ் அபாம், விஷேடமாக என் இணை நௌஸிலாவிற்கும் சொல்ல மறந்தவர்களுக்குமாக..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊஞ்சலாடும் பக்கங்கள்



- தும்பி 13
- அணில் பிள்ளை 14
- புத்தகம் 15
- தண்ணீர் 16
- நாட்காட்டிப் பறவை 17
- பாதை 18
- ஆழி 19
- வீட்டுத் தோட்டம் 20
- பூக்கள் 21
- ஆறு 22
- ஆசான் 23
- தம்பியரே 24
- சிறந்த கல்வி கற்றிடு 25
- மரங்கள் 26
- பாட்டி 27
- நல்லதைச் செய்திடு 28
- எறும்புகள் 29
- புல்வெளி 31
- தென்னம் பிள்ளை 33
- காகங்கள் 35
- விண்மீன்கள் 37
- பலூன் பறவைகள் 39


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறகு முளைத்த ஊஞ்சல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தும்பி


தும்பி பறக்குது தும்பி
தூரப் பறக்குது தும்பி
தும்பியைக் கண்டதும் தம்பி
தோகை விரிக்கிறான் நம்பி

சின்னச் சின்ன தும்பி
சிறகை விரிக்கும் தும்பி
சிறுவர் மனதைக் கவர்ந்து
சிட்டாய் பறக்குது தும்பி

வண்ண வண்ண தும்பி
வடிவான தும்பி
மின்ன மின்ன கண்களை
மெதுவாய் உருட்டுது தும்பி

பூக்களின் மேலே குந்தி
தேனதை குடிக்குது தும்பி
புள்ளி பூத்த தும்பி
புல்லில் உறங்கும் தும்பி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அணில் பிள்ளை

அணிலே அணிலே ஓடி வா
அழகு அணிலே ஓடி வா

சாம்பல் நிறமோ உன் வண்ணம்
சாதுவானது உன் உள்ளம்
சோம்பல் உன்னை அண்டாமல்
சோர்வே இன்றி திரிவாயே

எலிகளைப் போன்று எப்போதும்
எதனையும் திருடி உண்பதில்லை
அதனால் என்றும் என் நட்பாய்
அணிலே உன்னை எண்ணுகிறேன்

கொய்யாப் பழங்கள் கொண்டு வா
கோவைப் பழமும் கொண்டு வா
கூடு கட்டி வாழ்ந்திடவே
கோபுர உச்சியில் இடம் தருவேன்

அணிலே அணிலே ஓடி வா
அழகு அணிலே ஓடி வா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புத்தகம்

புத்தகமில்லா உன் வீடு
புத்திகளற்ற பெரும் காடு


புத்தகம் நல்ல புத்தகமாம்
புதுச் சொற்கள் நீந்தும் புத்தகமாம்
தினமும் அதனை படித்து வந்தால்
தீர்ந்திடும் அறிவுத் தாகமுமாம்

புத்தகங்களை வாங்கிடுவோம்
நித்தம் அதனைப் படித்திடுவோம்
பூச்சிகளதனை அரிக்காமல்
பொக்கிசமாய் காத்திடுவோம்

அயலவர் நண்பர் கேட்டு வந்தால்
அகம் மகிழ்ந்து கொடுத்திடுவோம்
அவரும் படித்து பலனடைந்தால்
அவனியும் உன்னை போற்றிடுமாம்

புத்தகமில்லா உன் வீடு
புத்திகளற்ற பெரும் காடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தண்ணீர்

தண்ணீர் தண்ணீர் தண்ணீர்
தாகம் தீர்க்கும் தண்ணீர்
தண்ணீர் இல்லையேல் தம்பி
தரணியில் எங்குமே கண்ணீர்

பயிர்கள் செழித்து வளர
பாய்ந்து வருகுது தண்ணீர்
பசுமை நிறைந்த உலகை
பணிவுடன் சமைக்குது தண்ணீர்

அவனியில் அதிகம் தண்ணீரே
அதனை காப்பது நம் கடமை
தண்ணீர் தன்னை பழியாதே
தண்ணீர் என்றும் நமதுடமை

அழுக்கினை அகற்ற வந்திங்கு
அழுக்காய் போகுது தண்ணீர்
தண்ணீர் போன்று நாமிருந்தால்
தரணியில் பிணக்கே இல்லையடா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நாட்காட்டிப் பறவை

வீட்டுச் சுவரில் நாட்காட்டி
விந்தை மிகுந்த நாட்காட்டி
சிறகை அடிக்குது நாட்காட்டி
பறக்க முடியா நாட்காட்டி

நாட்களை காட்டுது நாட்காட்டி
நானிலம் போற்றுது நாட்காட்டி
நாளையை நினைவூட்டும் நாட்காட்டி
நம்மை செம்மையாக்குது நாட்காட்டி

விடுமுறை சொல்லுது நாட்காட்டி
விடுதலை தருகுது நாட்காட்டி
வியப்பில் ஆழ்த்துது நாட்காட்டி
விடிந்ததும் மாறுது நாட்காட்டி

பன்னிரண்டு மாத சிறகுகளை
பாங்காய் கொண்டது நாட்காட்டி
ஒவ்வோர் வீட்டிலும் இது தொங்கும்
ஓராண்டுப் பறவை நாட்காட்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாதை

பாதை வழியே சென்றிடுவீர்
பக்குவமாய் நடந்திடுவீர்
எறும்புகள் போன்று அணி அணியாய்
எழிலாய் நடந்து முடித்திடுவீர்

பாதையில்லா ஊர்களிலே
பயணம் செய்வது கடினமடா
பாதை நடுவே முள் கிடந்தால்
பணிவாய் அருகே போட்டிடுவீர்

பாதையில் கழிவினை கொட்டாதீர்
குப்பை மேடாய் ஆக்காதீர்
குன்றும் குழியும் அது ஆனால்
குப்புற நீயும் விழுந்திடுவாய்

பாதை என்றும் நம் சொத்து
பண்பாய் அதனை நாம் காப்போம்
ஊரும் உலகும் உனைப் போற்றும்
உயரும் நமது வாழ்வாகும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆழி

ஆழி எங்கள் ஆழியாம்
ஆழம் மிகுந்த ஆழியாம்
அனுதினமும் அலையடித்து
ஆர்ப்பரிக்கும் ஆழியாம்

வண்ண வண்ண மீன்களை
வலையில் பிடித்து வாழ்ந்திட
வாஞ்சையோடு தந்திடும்
வள்ளல் எங்கள் ஆழியாம்

செம்படவர் வாழ்வினை
செதுக்கும் சிப்பி ஆழியாம்
சேர்த்து வைத்த முத்தினை
கோர்த்து தரும் ஆழியாம்

கப்பல் படகு தோணிகள்
கட்டும் இடமும் ஆழியாம்
நாடு கடந்து செல்லவே
பாதை அமைக்கும் ஆழியாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வீட்டுத் தோட்டம்


வெண்டி மிளகாய் கத்தரி
பாகை பயத்தை தக்காளி
அவரை கீரை வல்லாரை
பயிர் வகைகள் நடுவோம்

வீட்டுக் கழிவை உரமாக்கி
வீட்டுத் தோட்டப் பயிர்க்கிட்டு
சுற்றுப் புறத்து சூழலை
சுத்தமாய் என்றும் வைப்போம்

வீட்டுத் தோட்டம் செய்து
விளைச்சல் பெருகப் பெற்று
விற்ற பணத்தை சேர்த்து
வெகுவாய் வாழ்ந்து மகிழ்வோம்

ஒவ்வொரு வீட்டுப் புறத்திலும்
ஒழுங்காய் தோட்டம் செய்து
ஓயாது காத்து வந்தால்
ஒளி வீசும் நம் வாழ்வு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூக்கள்


சின்னச் சின்ன பூக்கள்
சிங்கார பூக்கள்
சில்லு வண்டுக்கு தேனை
சிரித்துக் கொடுக்கும் பூக்கள்

பனி படர்ந்த பூக்கள்
பன்னிறத்து பூக்கள்
பாலர் மனங் கமழ
பசுமை தரும் பூக்கள்

அழகை காட்டிக் காட்டி
ஆட்கள் தன்னை கூட்டி
அவர்கள் அன்பு மனதில்
ஆழப் பாயும் பூக்கள்

நல்லவர் மணக்கும் பூக்கள்
நறுமணம் கொண்ட பூக்கள்
நஞ்சாய் இருந்தும் பூக்கள்
நால்வரை கவரும் பூக்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆறு

ஆறே ஆறே சிற்றாறே
ஆல மரத்தடி சிற்றாறே
அழகாய் ஓடும் சிற்றாறே
ஆழம் இல்லா சிற்றாறே

வண்டல் மண்ணில் நீ இருப்பாய்
வடிவாய் கோடி மீன் வளர்ப்பாய்
உன்னை நம்பும் மீனவர்க்கு
உள்ளதை எல்லாம் கொடுத்து நிற்பாய்

பயிர்கள் வளரத் தோட்டமெல்லாம்
பகலும் இரவும் நீர் கொடுப்பாய்
பறவை மிருகம் நாடி வந்தால்
பணிவாய் தாகம் தீர்த்து நிற்பாய்

காடு மலைகள் கடப்பாயோ
கண்டதை அடித்துச் செல்வாயோ
கண்களை மூடி ஓடிக் கொண்டு
கடலில் வீழ்ந்து வாழ்வாயோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசான்

அரிவரி வகுப்பு படிப்பதனை
அழகாய் கற்றுத் தந்திடுவார்
அதுவே எங்கள் மனங்களிலே
ஆணி வேராய் பதிந்திடுமே

பழங்கதையோடு பாட்டெமக்கு
படித்தே எல்லாம் தந்துவிட்டு
பாடிப்பாடி ஆடி எம்மை
பரவசத்தில் ஆழ்த்திடுவார்

சுத்தமாக இருந்தாலே
சுகமே என்றும் வருமென்றும்
கந்தைத் துணியே ஆனாலும்
கசக்கியாவது கட்டுமென்பார்

ஒழுக்கம் உயிரிலும் மேலாகும்
அதுவே எங்கும் நிலையாகும்
என்றே எங்கள் மனங்களிலே
நன்றே கற்றுத் தந்திடுவார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தம்பியரே

தம்பியரே தம்பியரே
ததும்பியோடும் தம்பியரே
தங்கம் போல உயர்ந்திடுவீர்
தகதகத்துப் பளிங்கிடுவீர்

தரணியிலே உனையீன்று
தாலாட்டுப் பாடுமந்த
தாயுள்ளம் நோகிடவே
தலைகீழாய் நடவாதீர்

கடும் சோம்பல் கொள்ளாதீர்
கண்ட பிணி தொற்றிவிடும்
கல்லை உடைத்தேனுமிங்கு
காலத்தை ஓட்டிடுவீர்

உயிரிலும் மேலான
ஒழுக்கமதை பேணிவந்தால்
ஊரெல்லாம் உன் பெயரை
ஓங்கியே உரைத்திடுமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறந்த கல்வி கற்றிடு


காலைதனில் எழுந்திடுவீர்
காலைக்கடன்களை கழித்திடுவீர்
கல்விக்கூடம் சென்றிடுவீர்
கல்விதனைக் கற்றிடுவீர்

கற்றுக் கற்றுச் சிறந்திடுவீர்
கற்றதை பிறருக்குக் கூறிடுவீர்
கற்றுத்தரும் குருவோடு
கண்ணியமாய் நடந்திடுவீர்

அன்றாடம் பள்ளி சென்றிடுவீர்
அனைவருடனும் அன்பாய் பழகிடுவீர்
அறிவும் உயர் எண்ணமும்
அடையப் பேறு பெற்றிடுவீர்

அல்லும் பகலும் படித்திடுவீர்
அவனியில் பெரியோன் ஆகிடுவீர்
அன்னையர் உள்ளம் மகிழ்ந்திடவே
அதி உயர் கல்வி கற்றிடுவீர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மரங்கள்

பச்சை நிறத்து மரங்கள்
பல இனத்து மரங்கள்
பாசை இல்லா மரங்கள்
பல ஓசை எழுப்பும் மரங்கள்

மண்ணிலே இந்த மரங்களை
மாபெரியோன் தந்தனன்
மழையைக் கொடுக்கும் மரங்களே
மழையைக் கண்டு சிரிக்குமே

காய்க்கும் பூக்கும் மரங்கள்
கனிகள் நிறைந்த மரங்கள்
கசக்கும் புளிக்கும் ருசிகள்
கனிவாய் தந்திடும் மரங்கள்

பறந்து திரியும் பறவைகட்கு
பாய்விரிக்கும் மரங்கள்
பாடுபடும் மாந்தர் எமக்கும்
பலனளிக்கும் மரங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாட்டி


பல் விழுந்த பாட்டி
பல மிழந்த பாட்டி
பட படவென நடுங்கிடும்
பழுத்த முடி கொண்ட பாட்டி

பொல்லை ஊண்டி ஊண்டி
பொருட்கள் சேர்க்கும் பாட்டி
பொக்கு வாயால் பேசி
பெருமை கொள்ளும் பாட்டி

பாலர் பயல்களுக்கெல்லாம்
பழைய நல்ல கதைகள் சொல்லி
பரவசத்தில் ஆழ்த்தியே
பகிடி பண்ணும் பாட்டி

சுத்தமான உடையிலே
சுறு சுறுப்பாய் இயங்கியே
சுற்றுச் சூழல் பெருக்கியே
சுகமாய் வாழும் பாட்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லதை செய்திடு


அன்னையர் சொல்லைக் கேட்டிடு
அவர் காட்டும் பாதையில் நடந்திடு
அயலோர் உனைப் போற்றிட
அல்லும் பகலும் உழைத்திடு

உண்மை சொல்ல பழகிடு
உயர்வாய் வாழக் கற்றிடு
தீயார் நட்பை விலக்கிடு
தீமை செய்ய அஞ்சிடு

காடைத் தனத்தை விட்டிடு
கடவுளை தினமும் வணங்கிடு
காலம் உன்னை வாழ்த்திட
காந்தியின் வழியில் சென்றிடு

புவிதனில் உன்பெயர் நிலைத்திட
புண்ணியம் கோடி செய்திடு
ஏழை எழியவர்க் கிரங்கிடு
என்றும் நல்லதைச் செய்திடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எறும்புகள்

சின்னச் சின்ன எறும்புகள்
சிவப்பு நிற எறும்புகள்
சிறுவர் கண்டு அஞ்சிடும்
சிறகு முளைத்த எறும்புகள்

கரும்பு சுவைக்க எறும்புகள்
ஆவல் கொள்ளும் எறும்புகள்
ஒழித்து வைத்த உணவினை
ஊர்ந்து சென்று அரித்திடும்

உறுசுறுப்பாய் உழைத்துமே
உணவு அதனை சேர்க்குமே
மாரி காலம் வந்ததால்
மகிழ்ந்து பகிர்ந்து உண்ணுமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மண்ணை தோண்டி எறும்புகள்
மாடி வீடு கட்டிடும்
மாண்புடனே வாழ்ந்திடும்
மனதை கவர்ந்த எறும்புகள்

சிந்தை நிறைந்த எறும்புகள்
சிறப்பு மிக்க எறும்புகள்
எறும்பு போன்று நாங்களும்
என்றும் சீராய் வாழுவோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புல்வெளி

பச்சை நிறத்துப் புல்வெளி
பசுமை நிறைந்த புல்வெளி
பார்ப்போர் மனதை பறித்திடும்
பட்டு மெத்தைப் புல்வெளி

பனி பூத்த புல்வெளி
புனிதம் மிகுந்த புல்வெளி
பல்லினத்துப் புல்வெளி
பரந்து நிற்கும் புல்வெளி

ஆடு மாடு மேய வந்தால்
அன்பு கொண்டு அழைத்துமே
அழகு மேனி தன்னையே
அழிக்கும் பச்சைப் புல்வெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பறந்து வரும் பட்சிகள்
பாடியாடி களைத்த பின்
படுத்துறங்கப் பாய் விரிக்கும்
பரிவு மிக்கப் புல்வெளி

சிறுவர் மிதித்த போதிலும்
சினங்கள் கொள்ளாப் புல்வெளி
புல்வெளியை காத்து வந்தால்
புவியில் பஞ்சம் இல்லையே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தென்னம் பிள்ளை

வளங்கள் நிறைந்த
வஞ்சி நிலத்தின் வயிற்றில்
பிஞ்சிப் பிள்ளையாய்
பிறந்து வந்த பிள்ளை நீ

முறையாய் உன் தேகம்
முழுமையாய் காத்து வந்தால்
வானத்தை முத்தமிட முப்பதடி முடங்காமல்
வளர்ந்திடுவாய் ஓங்கி நீயும்

சிறகுகளை விரித்து சீவி சிங்காரித்து
சிரித்து நீயும் நின்று கொண்டு
சிறியோர் பெரியோர் பாராமல்
சிந்திக்க வைத்திடுவாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வருடங்கள் பல மடியும்
வடிவான உன் மடியில்
முத்து முத்தாய் பூப்பூத்து
முழுசு முழுசாய்க் காய்த்திடுவாய்

மனித இனப் பிள்ளையெல்லாம்
உனைப் போன்று பயனளித்தால்
வறுமை எனும் அரக்கனுக்கு
வாழுமிடம் வையகமில்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# காகங்கள்

பரிதி அரளும் முன்பே
படுத்துப் புரளும் மாந்தரை
கத்திக் கத்தி எழுப்பிடும்
கடமை தவறாக் காகங்கள்

அல்லும் பகலும் பறந்து
ஆலமெல்லாம் அலைந்து
அயராது இரை தேடிடும்
ஆற்றல் மிக்க காகங்கள்

தினமும் சேரும் நரகலை
தின்று தின்று தீர்த்திடும்
சுற்றுப் புறத்துச் சூழலை
சுத்தம் செய்யும் காகங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தனது உறவு இறந்ததும்
மனது தாங்க மாட்டாமல்
ஒன்று கூடி துயரினை
உணர்த்திப் பாடும் காகங்கள்

கூடில்லா குயிலுக்கு
கூட்டில் இடம் கொடுத்திடும்
வெள்ளை உள்ளம் கொண்ட
கரிய நிறக் காகங்கள்

மனித குலம் யாவரும்
காக்கைக் கூட்டம் போலவே
உலகில் வாழும் போதிலே
அறங்கள் ஓங்கி வளருமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விண்மீன்கள்

புன் முறுவல் சொரிந்துமே
பூத்துக் குலுங்கி இலங்கியே
கண் சிமிண்டிப் பார்த்திடும்
அழகு விண்மீன் கூட்டங்கள்

விடியும் வரை இரவினை
விழி சிவந்து பிதுங்கியே
ஒளியை கொண்டு வாசிக்கும்
களிப்பு கொள்ளும் வாசகன்

நீல வானில் நீந்திடும்
நிலவை ரசிக்கும் சிறுவர்போல்
இரவை ரசித்து களிப்புறும்
கண்ணைக் கவரும் விண்மீன்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காற்று விசும்பை அசைத்ததும்
செடியில் உதிரும் பூக்கள் போல்
சிலது உதிர்ந்து போகையில்
கண்கள் கலங்க வைக்குதே

விழித்த களைப்பைப் போக்கவே
பகலில் துயிலும் வௌவால்போல்
ஒன்று பட்டு உறங்கவே
விரைந்து செல்லும் விண்மீன்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பலூன் பறவைகள்

வண்ண வண்ண பலூன்கள்
வகை வகையாய் பலூன்கள்
வானில் பறந்து திரிந்திடும்
பறவை போன்ற பலூன்கள்

அழுது வடிக்கும் சிறுவர்கள்
மனதை உடன் கவர்ந்திடும்
சிரிக்க வைத்து மகிழ்ந்திடும்
சிகப்பு மஞ்சள் பலூன்கள்

குழந்தை கையில் இனிப்பினை
கொத்திச் செல்லும் காகம்போல்
காற்று பலூனை பறிக்கையில்
திட்டித் தீர்க்கும் குழந்தைகள்

மீண்டும் மீண்டும் காற்றினை
குடித்து வயிறு வீங்கியே
வெடித்துச் சிதறிச் செத்திடும்
பாவம் பலூன் பறவைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜமீல் அவரகளை மிக நீண்ட காலமாக நான் அறிவேன். அவரது கவிதைகளில் சிறுவரகளின் செய்திகளைச் சொல்ல வந்தபோது அது பற்றிய முன்னணிக் கவிஞனாகவும் கனதிமிக்க கவிஞனாகவும் நான் அவரைக் காண விளைந்தேன். சிறுவரகளின செய்திகளை இலக்கியங்களுள் கொண்டு வருவது மிக அலாதியான விசயம். அதனை வாசிக்கிறபோது நம்மையே அறியாத ஆனந்தத்திற்குள் நாம் திளைத்து விடுவதுண்டு. சிலவேளைகளில் அந்தச் செய்திகளைத் தவறாக வாசிக்கிறபோது வருகிற தாக்கம் மிகக் கடுமையானது. ஆனால், ஜமீல் சிறுவரகளின் செய்திகளை நமக்குள் மிக அற்புதமாகக் கொண்டு வந்த நல்ல கவிஞன்.

அதேவேளை, சிறுவர்கள் பற்றி அவர் எழுதிய கவிதைகளின் கனதி அளவுக்கு இந்தப் பாடல்களைச் சொல்ல முடியாது. ஆனால், அந்த வரிசையில் ஒரு முயற்சியினை கவிஞர் ஜமீல் நிறைவேற்றியிருக்கிறார். வரலாற்றுப் புகழ் மிக்க மருதமுனைக் கிராமத்தின் பெயரை உலகறியச் செய்வதில் ஜமீலுக்கும் பங்குண்டு. பல தேசிய விருதுகளையும் சரவதேச விருதினையும் பெற்ற கவிஞர் ஜமீல் ஈழத்து இலக்கிய உலகில் இன்னும் நீண்டகாலம் பேசப்படத்தக்க ஆற்றலுள்ளவர். அவர எழுத்துக்கள் என்றும் வாழ வேண்டும். சிறகு முளைத்த ஊஞ்சலில் அயிலன் குரதியின் நினைவுகள் கரைந்திருப்பதனால் இன்னுமொரு தரம் நிமிர்ந்திருந்து ஜமீலைப் பார்க்க வேண்டும் போலிருக்கிறது.

பேராசிரியர் றமீஸ் அப்துல்லா

ஒட்டுமொத்தமான நவீன கவிதை வளர்ச்சியில் கவிதை வெளிப்பாட்டு முறையிலே முன்னோடிகளற்ற விதத்தில் புதுமை செய்து முன்னோடியான கவிஞரொருவரைத் தந்த பெருமை கல்முனைக்குரியது. அவ்வாறே சிறுவர் பாடல் துறையில் அத்தகைய பெருமை ஜமீல் ஊடாக மருதமுனைக்கு வாய்த்துள்ளது எனலாம்.

பேராசிரியர் செ. யோகராசா



ISBN : 978-955-7733012

விலை - 200/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org